**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **செல்வி V. பார்கவி, B.A.B.L.,L.L.M.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

-------

2021-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13-ம் நாள் வெள்ளிக்கிழமை
திருவள்ளுவராண்டு 2052, பிலவ வருடம் ஆடி மாதம் 28-ம்நாள்

------

**<u>அசல் வழக்கு எண். 47/2016 -ல் இடைமனு எண்.02/2020</u>**

1. நூர்தீன்
2. இசாக் மரைக்காயர்
3. பக்கிர்முகம்மது ...மனுதாரர்கள்/வாதிகள்

...எதிர்...

1. ஆதிமூலம் ..1-ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி
2. சரியா பீவி
3. குத்தூஸ் பிவி
4. ஆசியாபேகம்
5. ஜீனிதாபேகம் ..2 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/வழக்கில் புதிதாக சேர்க்க வேண்டிய நபர்கள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 06.08.2021 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். சுந்தரய்யா அவர்களும், 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். கார்த்திக்ராஜன் அவர்களும், 2 முதல் 5 எதிர்மனுதாரர்களை அழைக்கப்பட்டு ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினர்கள் ஆக்கப்பட்டும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரையில் எனது பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**<u>உத்தரவு</u>**

இம்மனுவின் 2 முதல் 5 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 2 முதல் 5 பிரதிவாதிகளாக புதிய தரப்பினர்களாக சேர்க்க உத்தரவிடக்கோரி மனுதாரர்களால் இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 1 , விதி 10(2) -ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுவின் சுருக்கம்

மனுதாரர்கள் அசல் வழக்கின் வாதிகள். மனுதாரர்கள்/வாதிகளால் அசல் வழக்கானது 1-ம் எதிர்மனுதாரர்/1,2 பிரதிவாதிகளுக்கு எதிராக தாவாச்சொத்தின் வசப்பரிகாரம் கோரியும், செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கான விசாரணைக்கு வந்து வாதிகள் தரப்பு சாட்சியான வா.சா.1 குறுக்குவிசாரணை செய்ய வாய்தா போடப்பட்டுள்ளது. இந்த மனுவின் 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களின் சகோதரிகளும் இறந்த தாஉறா மரைக்காயரின் வாரிசுகளும் ஆவார்கள். 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் வழக்குச் சொத்தில் எந்த பாகமும் கோரவில்லை. 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களுடன் சேர்ந்து வழக்கை நடத்த முன்வரவில்லை. தாவா சொத்து குடும்ப ஏற்பாட்டின்படி மனுதாரர்களுக்கு ஒதுக்கப்பட்டது. இருந்தபோதிலும் வீண் விவகாரங்களையும், அனாவசிய கட்சிகளையும் தவிர்க்கும்பொருட்டு இந்த மனுவின் 2 முதல் 5 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 2 முதல் 5 பிரதிவாதிகளாக தரப்பினர்கள் சேர்க்க வேண்டியது அவசியமானது. எனவே இம்மனுவின் 2 முதல் 5 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 2 முதல் 5 பிரதிவாதிகளாக சேர்த்து இந்த அசல் வழக்கை நடத்த வேண்டியது அவசியமானது. எனவே 2 முதல் 5 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 2 முதல் 5 பிரதிவாதிகளாக சேர்க்கக்கோரி தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும்.

3. 1-ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரைச்சுருக்கம்

மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. தாவா சொத்திற்கு எவ்வித சொந்தமும், உரிமையும் இல்லாத தாஉறா மரக்காயரின் வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட வேண்டிய அவசியம் இல்லை. அவர்களுக்கு தாவா சொத்தில் எவ்வித பாகமும் கிடைக்கக்கூடியதல்ல. பாகம் கிடைக்காத சொத்தில் பாகம் வேண்டாம் என்று புதிதாக சேர்க்கக்கோரும் நபர்கள் கூறிவிட்டதாக மனுதாரர்கள் கூறியுள்ளது மறுக்கப்படுகிறது. தாவா சொத்துக்கள் ஏற்பாட்டுபடி மனுதாரர்களுக்கு கிடைத்ததாக கூறியுள்ளதை 1-ம்எதிர்மனுதாரர் மறுக்கிறார். அதனை மனுதாரர்கள் நிரூபிக்க வேண்டும். மனுதாரர்கள் புதிதாக சேர்க்க கோரும் நபர்கள் இவ்வழக்கு சொத்திற்கு எவ்வித தொடர்பும், உரிமையும் இல்லாத சொத்தில் உரிமையற்ற நபர்கள் ஆவார்கள். அவர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக

சேர்த்தால் தேவையற்ற வீண் வியாஜ்ஜியங்கள் ஏற்படும். இவ்வழக்கில் தேவையற்ற தரப்பினர்களை சேர்த்து இவ்வழக்கின் விசாரணை காலங்கடத்த வேண்டும் என்ற நோக்கத்தில் மனுதாரர்கள் இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளனர். எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4.. <u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>

மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

5. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. **<u>தீர்வு</u>**

இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்குக் கோப்பு பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் 1-ம்எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக அசல் வழக்கானது சுவாதீனமீட்பு பரிகாரம் மற்றும் செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இம்மனுவின் 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் இறந்த தாஉறா மரைக்காயரின் வாரிசுகளும் மனுதாரர்களின் சகோதரிகளும் ஆவார்கள் என்றும், அவர்கள் மனுதாரர்களுடன் சேர்ந்து வழக்கை நடத்த முன்வரவில்லை என்றும், தாவா சொத்து குடும்ப ஏற்பாட்டின்படி மனுதாரர்களுக்கு ஒதுக்கப்பட்டது என்றும், இருப்பினும் வீண் விவகாரங்களை தவிர்ப்பதற்காகவும், அனாவசிய கட்சிகளை தவிர்க்கும் பொருட்டும் இம்மனுவின் 2 முதல் 5 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 2 முதல் 5 பிரதிவாதிகளாக சேர்க்கக்கோரியுள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டுமென்றும் வாதம் செய்யப்பட்டது. 1-ம்எதிர்மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் தாவா சொத்திற்கு எவ்வித சொந்தமும், உரிமையும் இல்லாத தாஉறா மரைக்காயரின் வாரிசுகள் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், தாவாச்சொத்தில் அவர்களுக்கு எவ்வித பாகமும் கிடைக்கக்கூடியதல்ல என்றும், புதிதாக சேர்க்கக்கோரும் நபர்களுக்கு தாவாச்சொத்தைப்பொறுத்து எவ்வித தொடர்பும், உரிமையும் இல்லை என்றும், அவர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்தால் தேவையற்ற வீண் வியாஜ்ஜியங்கள் ஏற்படும் என்றும், 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் இந்த வழக்கிற்கு மனுதாரர் தேவையற்ற தரப்பினர்கள் என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய

வேண்டும் என்றும் வாதிடப்பட்டது. 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் இம்மனுவில் ஆஜராகாமல் தோன்றாத்தரப்பினர்களாக உள்ளனர்.

7. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் அவர்களது சகோதரிகளும் இறந்த தாஉறா மரைக்காயரின் வாரிசுகளுமான 2 முதல் 5 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 2 மதல் 5 பிரதிவாதிகளாக சேர்க்க் வேண்டுமென இம்மனுவில் கோரப்பட்டுள்ளது. 1-ம்எதிர்மனுதாரர் தரப்பில் அதற்கு ஆட்சேபணை தெரிவித்து 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் இந்த அசல் வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர்கள்' என்றும் மனுவைத்தள்ளுபடி செய்ய வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது. இந்நிலையில் வழக்குக்கோப்புகளை பரிசீலனை செய்கையில் சகோதரர்களான மனுதாரர்கள்/வாதிகள் முதல்எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிக்கு எதிராக தாவாசொத்தினை வசம் பெறுவதற்காக சுவாதீன மீட்பு பரிகாரமும், தாவாச்சொத்தில் உள்ள கட்டுமானங்களை அகற்றவேண்டுமென செயல் உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவின் 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் இந்த மனுவின் மனுதாரர்களின் சகோதரிகள் என்பதைப்பொறுத்து எவ்விதமான பூசலும் இல்லை. தாவா சொத்து மனுதாரர்களுக்கு குடும்ப பாக ஏற்பாட்டின்படி கிடைத்த சொத்து என்பதாலும், சுவாதீன மீட்புப்பரிகாரமும், செயல் உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த அசல் 'வழக்கிற்கு தேவையான தரப்பினர்கள் அனைவரையும் தரப்பினர்களாக சேர்த்து, அதன்பின்பு இந்த வழக்கில் தீர்வு காண்பதே இறுதியான தீர்வாக இருக்கும் என்பதுடன், அது ஒரே பொருண்மையின் அடிப்படையில் பல்வேறு வழக்கு நடவடிக்கை ஏற்படுவதை தவிர்க்க உதவும் (Multiplicity of proceedings ) என்பதாலும், இந்த அசல் வழக்கில் சேர்க்க வேண்டிய அனைத்து தரப்பினரையும் சேர்த்து அதன்பின்னர் தீர்வு காண்பதுதான் நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இந்நிலையில் இம்மனுவின் 2 முதல் 5 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்ப்பதற்கு ஒரு வாய்ப்பு வழங்குவதுதான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆதலால் மனுதாரர்களுக்கு ஒரு வாய்ப்பு அளிக்கும் விதமாக இம்மனுவின் 2 முதல் 5 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 2 முதல் 5 பிரதிவாதிகளாக தரப்பினர்களாக சேர்க்கக்கோரியுள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடலாம் என்று இந்நீதிமன்றம்

கருதுகின்றது. எனவே மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவு பிறப்பிப்பது என்றும், மனுவின் தன்மை கருதி இம்மனுவின் செலவுத்தொகையை தரப்பினர்கள் அவரவர்களே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

8. முடிவில், இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2021-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி.

<u>பின் இணைப்பு</u>

<u>மனுதாராகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> - இல்லை-

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> - இல்லை-

மா.உ.நீ